Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — CC. 288/16
Sessions prosecution
depositions of witness for — LW1 examined as PW 1Chief and cross

| | | |
|---|---|---|
| Time | : | 12.48pm – 12.58pm |
| Name | : | திரு. பெரியசாமி |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 12th day of August 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

முதல் விசாரணை

நான் தற்போது மெட்டரையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன உண்ணாமலையம்மா எனது தாய் ஆவார். சுமார் 11 வருடத்திற்கு முன்பு கொல்லையில் புளியங்காய் பறிக்க சென்று விட்டு திரும்பி வரும் போது நான் வீட்டில் இருந்த சமயம் ராஜம் பேருந்து எனது தாய் மீது மோதி பேருந்தின் முன் சக்கரத்தில் சிக்கி விட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் மாலை 7.00 மணிக்கு பாலம், புளியமர மைல் கல் அருகே வந்து பார்த்த போது ராஜம் பேருந்து இருந்தது. எனது தாயின் வயிற்று மீது

பேருந்தின் சக்கரம் ஏறி இறந்து கிடந்தார். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதன் பிறகு ஒசூர் அரசு மருத்துவ மனையில் எனது தாயிக்கு பிரேத பரிசோதனை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கைரேகை என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

யாருடைய ஆஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் யாரும் காரணம் இல்லை. விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் ஊர்காரர்கள் சொன்னார்கள். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு யார் யார் சென்றோம் என்றால் நான், எனது தம்பி, தங்கை ஆகியோரை அழைத்து சென்றேன். எனது தாயிக்காக விபத்து காப்பீடு பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எனது தாயின் ஆஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் காப்பீடு பெறுவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions prosecution<br>depositions of witness for | CC. 288/16<br><br>LW2 examined as PW 2 Chief and cross |

| | | |
|---|---|---|
| Time | : | 12.59pm – 1.03 pm |
| Name | : | திரு. அரியப்பன் |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 12th day of August 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

முதல் விசாரணை

நான் தற்போது மெட்டரையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன உண்ணாமலையம்மா எனது தாய் ஆவார். அ.சா.1 எனது அண்ணன் ஆவார். சுமார் 11 வருடத்திற்கு முன்பு ஊர் பக்கத்தில் புளியங்காய் பறிக்க சென்று விட்டு திரும்பி வரும் போது நான் வீட்டில் இருந்த சமயம் 7.00 மணிக்கு ராஜம் பேருந்து எனது தாய் மீது மோதி பேருந்தின் முன் சக்கரத்தில் சிக்கி விட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் பாலம், புளியமர மைல் கல் அருகே வந்து பார்த்த போது ராஜம் பேருந்து இருந்தது. எனது

தாயின் வயிற்று மீது பேருந்தின் சக்கரம் ஏறி இறந்து கிடந்தார். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அதன் பிறகு ஒசூர் அரசு மருத்துவ மனையில் எனது தாயிக்கு பிரேத பரிசோதனை செய்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

விபத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. எனது தாயிக்காக விபத்து காப்பீடு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு விபத்து ஏற்பட்டது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும் தாயின் ஆஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் காப்பீடு பெறுவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — CC. 288/16
Sessions prosecution
depositions of witness for — LW3 examined as PW 3 Chief and cross

| | | |
|---|---|---|
| Time | : | 1.05pm – 1.12pm |
| Name | : | திருமதி. தங்கம்மாள் |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 12th day of August 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

முதல் விசாரணை

நான் தற்போது கொப்பகரையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன உண்ணாமலையம்மா எனது தாய் ஆவார். அ.சா.1,2 எனது அண்ணன்கள் ஆவார். சுமார் 7 வருடத்திற்கு முன்பு மெட்டரை அருகே புளியங்காய் பறிக்க சென்று விட்டு திரும்பி வரும் போது நான் வீட்டில் இருந்த சமயம் பேருந்து எனது தாய் மீது மோதி பேருந்தின் முன் சக்கரத்தில் சிக்கி விட்டதாக எனக்கு எனது அண்ணன்கள் போனில் தகவல் சொன்னார்கள். நான் ஒசூர் அரசு மருத்துவ மனைக்கு சென்று பார்த்த

போது  எனது தாயின் மீது பேருந்தின் சக்கரம் ஏறி  இறந்து கிடந்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் இல்லை. நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. எந்த பேருந்து எனது தாயின் மீது ஏறியது என்று எனக்கு தெரியுமா என்றால் KRMS பேருந்து ஏறியது. எனக்கு யார் சொன்னார்கள் என்றால் எனது அண்ணன்கள் சொன்னார்கள். நான் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை.  எனக்கு விபத்து ஏற்பட்டது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும் யாருடைய  ஆஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றும் போலிசார் கேட்டு கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — CC. 288/16
Sessions prosecution
depositions of witness for — LW4 examined as PW 4 Chief and cross

| | | |
|---|---|---|
| Time | : | 1.13pm – 1.16pm |
| Name | : | திருமதி. நாகம்மாள் |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 12th day of August 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

முதல் விசாரணை

நான் தற்போது கொப்பகரையில் குடியிருந்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன உண்ணாமலையம்மா எனது தாய் ஆவார். அ.சா.1, 2 மற்றும் எனது அண்ணன்கள் மற்றும் அக்கா ஆவார்கள். சுமார் 11 வருடத்திற்கு முன்பு கொல்லையில் புளியங்காய் பறிக்க சென்று விட்டு திரும்பி வரும் போது நான் வீட்டில் இருந்த சமயம் ராஜம் பேருந்து எனது தாய் மீது மோதி பேருந்தின் முன் சக்கரத்தில் சிக்கி விட்டதாக எனக்கு எனது அண்ணன்கள் போனில் தகவல் சொன்னார்கள். நான் ஒசூர்

அரசு மருத்துவ மனைக்கு சென்று பார்த்த போது  எனது தாய் இறந்து கிடந்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் இல்லை. நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. எனக்கு யார் சொன்னார்கள் என்றால் எனது அண்ணன்கள் சொன்னார்கள். நான் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. எனக்கு விபத்து ஏற்பட்டது குறித்து நேரடியாக தெரியாது என்றும் யாருடைய ஆஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றும் போலிசார் கேட்டு கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — CC. 288/16
Sessions prosecution
depositions of witness for — LW6 examined as PW 5 Chief and cross

| | | |
|---|---|---|
| Time | : | 1.17pm – 1.27pm |
| Name | : | திரு. மாரிமுத்து |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 12th day of August 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

முதல் விசாரணை

1) நான் தற்போது தொட்ட மெட்டரையில் குடியிருந்து வந்து ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன உண்ணாமலையம்மாள் எனது பாட்டி ஆவார். கடந்த 24/02/2013 ம் தேதி தோட்டத்தில் இருந்து புளியங்காய் பறித்து கொண்டு வரும் போது தொட்ட மெட்டரை தாண்டி பாலம் அருகே மாலை 7.00 மணியளவில் ராஜம் பேருந்து நான் பக்கம் தோட்டத்தில் வேலை செய்து கொண்டு இருந்த போது டம் என்று சத்தம் கேட்டு வந்து பார்த்த போது பேருந்தின் இடது பக்க முன் சக்கரம் எனது பாட்டியின் இடது பக்க

வயிற்றின் மீது ஏறி எனது பாட்டி இறந்து விட்டார். பேருந்தை ஓட்டியவர் அங்கே இல்லை. பேருந்து மட்டும தான் இருந்தது பேருந்தின் பதிவு எண். TN29H5255 அல்லது 5455 ஆகும். அதன் பிறகு ஆம்புலன்ஸ் மூலமாக எனது பாட்டியை ஒசூர் அரசு மருத்துவ மனைக்கு எடுத்து சென்றார்கள். அன்று மாலை சுமார் 7.30 மணிக்கு போலிசார் சம்பவயிடத்தை பார்த்து சென்றார்கள். அதற்கு மறுநாள் காலை 8.00, 8.30 மணியளவில் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் தயார் செய்தார்கள்.

2) என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள 1ம் சாட்சி கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து உத்தரவிடப்படுகிறது.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions prosecution<br>depositions of witness for | CC. 288/16<br><br>LW7 examined as PW 6 Chief and cross |

| | | |
|---|---|---|
| Time | : | 1.29pm – 1.35pm |
| Name | : | திரு. கிருஷ்ணன் |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 12th day of August 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

முதல் விசாரணை

1) நான் தற்போது தொட்ட மெட்டரையில் குடியிருந்து வந்து விவசாயம் செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன உண்ணாமலையம்மாள் எனது பாட்டி ஆவார். சுமார் 11 வருடத்திற்கு முன்பு நான் தோட்டத்தில் வேலை செய்து கொண்டு இருந்த போது எனது பாட்டி புளியங்காய் பறித்து கொண்டு வரும் போது ராஜம் பேருந்து மாலை 7.00 மணிக்கு எனது பாட்டியின் மீது ஏறி அனைவரும் சத்தம் போட்டு நான் வந்து பார்த்த போது பேருந்தின் முன் சக்கரம் எனது பாட்டியின் நெஞ்சின் மீது ஏறி எனது பாட்டி இறந்து

விட்டார். பேருந்தை ஓட்டியவர் அங்கே இல்லை. ஓடிவிட்டார். பேருந்து மட்டும தான் இருந்தது பேருந்தின் பதிவு எண். TN29 5455 ஆகும். அதன் பிறகு ஆம்புலன்ஸ் மூலமாக எனது பாட்டியை ஒசூர் அரசு மருத்துவ மனைக்கு எடுத்து சென்றார்கள். அதற்கு மறுநாள் காலை 7.00 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் தயார் செய்தார்கள்.

2) என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் 2 வதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள எனது 2ம் சாட்சி கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து உத்தரவிடப்படுகிறது.

ஒம்/ திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,
குற்றவியல் நீதித்துரை நடுவர்
விரைவு நீதிமன்றம்
ஒசூர்.